**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., LLM.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் நாள் திங்கட்கிழமை

**IA.No.03/2024 in OS.No.254/2021**

**TNTM 03000444/2021**

முருகேசன் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

வீரமணி ...எதிர்மனுதாரர் /பிரதிவாதி

இம்மனு என் முன்பாக 05.08.2025 அன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.கார்த்தி,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு..R.மனோகரன்,M.B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தை மனுதாரர்/வாதி தரப்பு சான்றாவணமாக ஏற்க அனுமதிவேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 7 விதி 14(3)ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவில் மனுதாரர்/வாதி. மேற்படி வழக்கை மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. பிரதிவாதி கிரையம் பெற்ற 07.01.2011 தேதியிட்ட கிரைய பத்திரம் தற்போது தான் கிடைத்து. அந்த ஆவணத்தை ஏற்று மனுதாரர் தரப்பில் சான்றாவணமாக குறியீடு செய்ய அனுமதிக்கவேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிருரை சுருக்கம்:–**

மனுதாரர் மனு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர் மனு அபிடவிட் சங்கதிகள் உண்மையல்ல. மனுவில் கூறியுள்ள சங்கதிகளை மனுதாரர் நிருபணம் செய்யவேண்டும். மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணம் ஏற்கனவே வாதியிடம்

வட்டிக்காக பணம் பெற்றபோது பிரதிவாதி அளித்த ஆவணமாகும். அந்த ஆவணத்தை வழக்கு தாக்கல் செய்யும்போது வாதி தன் வசம் வைத்திருந்தார். அதனை வழக்கு தாக்கல் செய்யும்போது தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு தற்போது தவறான விவரங்கள் கூறி இந்த மனுவை தாக்கல் செய்திருப்பதால் தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்தா? இல்லையா? என்பதே ஆகும்.

4. மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியம் இல்லை. இருதரப்பிலும் ஆவணங்கள் இல்லை.

5. **<u>பிரச்சனைக்கான தீர்வு:–</u>**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியம் இல்லை. இருதரப்பிலும் ஆவணங்கள் இல்லை. மனுதாரர்/வாதி அசல் வழக்கை எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார். வாதி தரப்பில் சாட்சியம் அளிக்க வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், இந்த மனுவினை உரிமையியல் விசாரணை சட்டம் கட்டளை 7 விதி 14(3)ன் கீழ் தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி பெயரில் உள்ள 07.01.2011 தேதியிட்ட கிரைய பத்திரம் அசல் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த அசல் கிரைய பத்திரத்தை வாதி தரப்பில் சான்றாவணமாக ஏற்க அனுமதிவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் மனுவில் குறிப்பிட்டுள்ள பிரதிவாதி பெயரில் உள்ள அசல் கிரைய பத்திரம் பிரதிவாதி, வாதியிடம் கடன் வாங்கும்போது அளித்த ஆவணம் என்றும், வழக்கு தாக்கல் செய்யும்போது மேற்படி அசல் கிரைய ஆவணம் வாதியின் வசம் இருந்தது. தற்போது கிடைத்ததாக பொய்யான விவரம் கூறி தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்து வாதம் செய்யப்பட்டது.

7. அசல் வழக்கானது வாதிக்கும், பிரதிவாதிக்கும் ஏற்பட்டுள்ள 25.10.2018 தேதியிட்ட கிரைய ஒப்பந்த ஆவணத்தின் பேரில் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வேண்டி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கிரைய ஒப்பந்தம் போடப்பட்டுள்ள வழக்கு சொத்து சம்மந்தமான பிரதிவாதி பெயரில் உள்ள அசல் கிரைய ஆவணம் தனது தரப்பில் ஆவணமாக குறியீடு செய்ய அனுமதி வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்து சம்மந்தமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கினை தீர்வு காண்பதற்கு இம்மனுவில் குறிப்பிட்டுள்ள அசல் கிரைய ஆவணம் உதவிகரமாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவை அனுமதிப்பதினால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2025.09.01 18:36:10 +0530

**சார்பு நீதிபதி,**

**ஆரணி.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்:–</u>** இல்லை

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2025.09.01 18:36:20 +0530

**சார்பு நீதிபதி,**

**ஆரணி.**